REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 248

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரு. 24—0—0
6 மாதம் ரு. 12—0—0
3 மாதம் ரு. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரு. 30—0—0
6 மாதம் ரு. 15—0—0
3 மாதம் ரு. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY. THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: பங்குனி 18உ புதன் (31—3—54) ★ ★ ★ வெளியூர்: பங்குனி 19உ வியாழன் (1—4—54)

'ஏக இந்தியா'—முக மூடி கிழிகிறது!

—(:)—

உ.பி. சர்க்கார் எரி உள்ளம் அம்பலம்!

—(:)—

சென்னை எல்.டி. ஆசிரியர்கள்மீது பாய்ச்சல்

சர்க்கார் பள்ளிகளில் புதிய நியமனம் செய்ய மறுப்பு!

நியமனமானவர்களை ஒழித்துக்கட்ட முடிவு!

'ஒரே இந்தியா' எனவும், 'நாம் அனைவரும் இந்தியர்' எனவும், இயற்கைக்கும், வரலாற்று உண்மைக்கும் மாறுதலாகப் பொய் கூறப்பட்டு வருவதையும், அடிப்படையில் உள்ள முரண்பாட்டை மறைத்து போலி ஒற்றுமை நாடகம் நடத்தப்பட்டு வருவதையும் அனைவரும் அறிவர்.

பண்டிதரின் பிறப்பிடமான உத்திர பிரதேச இந்து மக்களின் இந்தி மொழி வெறியும், பிற மொழி வெறுப்பும், மற்றும் பகுதி மக்கள் மீது கொண்டுள்ள காழ்ப்பும், தேசிய வாதிகளால் எவ்வளவு சாமர்த்தியமாக மறைக்கப்பட்ட போதிலும், வாய்ப்பு நேரும்பொழுதெல்லாம் விளக்கமாகிக் கொண்டே வருகிறது.

சென்னையிலிருந்து உத்திர பிரதேசத்தில் குடியேறி சர்க்கார் பள்ளிகளில் வேலைக்கமர்ந்துள்ள எல். டி. ஆசிரியர்களைக் குறித்தும், வேலை கேட்கும் ஆசிரியர்கள் குறித்தும், உத்திர பிரதேச சர்க்கார் ஒரு உத்திரவு பிறப்பித்துள்ளது.

அதுபற்றி, அங்கு குடியேறியுள்ள சென்னையில் பயிற்சி பெற்று பட்டம் பெற்றுள்ள ஆசிரியர் ஒருவர் 28—3—54 'இந்து' இதழில் கடிதம் ஒன்றை வரைந்துள்ளார். அது, இது:-

ஐயா,

"நான் சென்னை பல்கலைக் கழகத்தின் பி. ஏ., பி. டி., பட்டம் பெற்றவன். உத்திர பிரதேசத்தில் தங்கி வாழ்ந்து வருகிறேன். ஆசிரியர் தொழில்தான், தேசத்தின் குழந்தைகளுக்கு உண்மையான குறிப்பிடத் தகுந்த, ஊழியம் புரியக் கூடிய சிறந்த பணியாக இருப்பதால், அப்பணியை மேற்கொள்ளும் ஆர்வமுடையவனுகஉள்ளேன்

உத்திர பிரதேசத்தில் ஆசிரியர் தொழில் புரிய எனக்கு இடம் கிடையாது என்பதை திடீரென்று நான் அறியவந்ததும் ஆச்சரியமும் ஏமாற்றமும் அடைந்தேன். சென்னையில் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு பள்ளிகளில் வேலை தரக்கூடாது எனவும், ஏற்கனவே அமர்த்தப்பட்டுள்ள ஆசிரியர்களையும் உடனடியாக உத்திர பிரதேசத்திலேயே பயிற்சி பெற்றவர்களால் நிரப்பப்பட வேண்டும் எனவும் உத்திர பிரதேச சர்க்கார் ஒரு கட்டளை பிறப்பித்து இருப்பதே காரணமாகும். நம்முடைய சென்னை பல்கலைக் கழ

(4-ம் பக்கம் பார்க்க)

✶✶✶✶✶✶✶✶✶✶✶✶ ✶✶✶✶✶✶

சென்னை சட்ட சபை காங்கிரஸ் கட்சித் தலைவர்

காமராசர் தேர்ந்தெடுக்கப்பட்டார்

சென்னை, மார்ச் 31—

நேற்று மாலை சி. இராசகோபாலாச்சாரியார் தலைமையில் நடைபெற்ற சென்னை சட்ட சபை காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. காமராஜ் சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவருக்கு 93 ஓட்டுகளும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட நிதி மந்திரி சி. சுப்ரமணியத்திற்கு 41 வோட்டுகளும் கிடைத்தன.

மந்திரி சபை அமைப்பைப் பற்றி ஆச்சாரியாரையும், காமராசரையும் சந்தித்துக் கேட்டதற்கு காங்கிரஸ் தலைவரிடமிருந்து தகவல் கிடைத்த பின்னர் தான் அதைப் பற்றிய விவரம் அறிவிக்கப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இரண்டொரு நாளைக்குள் இது பற்றிய சிக்கல்கள் தீர்ந்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஈராக் அரசரைக் கொல்ல கராச்சியில் சதி

பிற நாட்டார் தூண்டுதலும் இருக்கிறதாம்!

சிலோன் தூதர் காரியாலய அலுவலருக்கும் தொடர்புண்டாம்

மூன்று பாக். இராணுவத்தினர் உள்ளிட்ட மூவர் கைது

கராச்சி, மார்ச் 30—

ஈராக் அரசரான இரண்டாவது பெய்சல் அரசர் பாகிஸ்தானுக்கு வந்திருந்தகாலை, கராச்சியில் அவரைக் கொன்றுவிட சதி செய்யப்பட்டதாகவும், தருணத்தில் தடுக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது. அது சம்பந்தமாக மூவரை சர்க்கார் கைது செய்து காவலில் வைத்திருக்கிறது. அம்மூவரில் மூன்னாள் பாகிஸ்தான் இராணுவத்தில் உயர்தர அதிகாரியாக இருந்த ஒருவரும் சதியில் கலந்திருந்ததாகக் கூறி கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான்—துருக்கி—அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் கூட்டாகப் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்ள ஈராக் முன்வந்ததைத் தவிர்க்கவே அதை விரும்பாத வெளி நாட்டின் தூண்டுதலினாலேயே ஈராக் அரசரைக் கொல்ல சதி செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

கராச்சியில் உள்ள சிலோன் சர்க்கார் தூதர் காரியாலயத்தின் இரண்டாவது செயலாளரான ரத்தினகிரி பெரிரா அவர்களை சிலோன் சர்க்கார் மார்ச் 13-ந் தேதி, பிரஸ்தாப சதியில் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகப்பட்டு, திரும்ப அழைத்துக்கொண்டதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

நகருக்கு, ஈராக் அரசர் வந்திறங்க இருந்த 9 மணி நேரத்திற்கு முன்பாக, மார்ச் 12-ந் தேதி சதியில் கலந்திருந்த மூவரையும் போலீசார் கைது செய்துவிட்டனர். கைது செய்தபொழுது சர்க்கார் அனுமதி பெறாத 2 துப்பாக்கிகளையும், 12 தோட்டாக்களையும் பாக். போலீசார், அவர்களிடமிருந்து கைப்பற்றினர்.

பாகிஸ்தான் இராணுவத்திலிருந்து விலக்கப்பட்ட மஜீத், வழக்கறிஞரான ரியாஷ் அசாமி, வியாபாரியான சில்வெய்ரா ஆகியோர்தான் சதி செய்ததாகக் கைது செய்யப்பட்டுள்ளவர்களாவர்.

பிரெஞ்சிந்திய விடுதலைப் போரில் ஒரு புதிய நெருக்கடி

—o—

கட்சிக்கு ஆதிக்கம் தேட பொதுவுடமையினர் முயற்சி

அதற்கான கிளர்ச்சி நாளை துவக்கப்படுமாம்!

கடலூர், மார்ச் 28—

கூடுமானால் மற்ற கட்சிகளுடன் கலந்துகொண்டும், இல்லையானால் தனித்தும் பிரெஞ்சிந்திய விடுதலைப் போரில் நேரடியாகக் கலந்துகொள்வது என பிரெஞ்சிந்திய கம்யூனிஸ்டு கட்சியினர் முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

அதன் தலைவர், சூபேர் கட்சியான சோஷலிஸ்ட் கட்சி உள்ளிட்ட எல்லா கட்சிகளுக்கும் அழைப்பு அனுப்பி இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

ஏப்ரல் 4-ந் தேதி சர்வ கட்சி கூட்டம் ஒன்று கடலூரில் நடைபெற இருக்கிறது. அந்தக் கூட்டத்தில் விடுதலைப் போராட்டத்திற்கான சர்வ கட்சி திட்டம் ஒன்று உருவாக்கப்படும் எனவும் தெரிய வருகிறது.

இதற்குள்ளாக, நாளை பிரெஞ்சிந்தியாவைச் சேர்ந்த திருக்கனூர் பகுதியில் இந்திய தேசியக் கொடியை ஏற்றி வைத்து, மாலை பொதுக்கூட்டம் நடத்துவது என கம்யூனிஸ்ட் கட்சி முடிவிற்கு வந்திருக்கிறது. இதுபோலவே காலாப்பத்திலும், செட்டபாக்கத்திலும், அதன் பிறகு பாகூரிலும் தனித்த முறையில் கிளர்ச்சி செய்வதென கம்யூனிஸ்ட் கட்சி திட்டமிட்டிருக்கிறது.

அதிகாரிகளின் எதிர் நடவடிக்கை

பிரெஞ்சிந்திய இணைப்பை ஆதரித்து நடைபெறும் அறப்போர் மிகவும் பலமடைந்து விட்டது.

புதுவையிலிருந்து வெளியே செல்லும் வாகனங்களையும், அங்கு வரும் வாகனங்களையும் பிரெஞ்சிந்தியப் போலீசார் சோதனை நடத்துகின்றனர்.

இந்தியப் போலீசார் இரகசியமாகப் பிரெஞ்சு இந்தியாவுக்குள் கொண்டுவரப்படாமல் இருப்பதற்கு இந்த ஏற்பாடாம்.

இந்திய சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைக்கு இது எதிர்ப்பு நடவடிக்கையாம்.

ஏற்கனவே மூன்று பிரெஞ்சிந்தியாவின் ரோமன்களிலுள்ள மக்கள், பிரெஞ்சு அதிகாரத்தை ஒப்புக் கொள்வதில்லை என்று முடிவு செய்தனர்.

இந்திய சர்க்கார் நிதி மந்திரி விலகுவார்?

கருத்து வேற்றுமை காரணமாம்?

புதுடில்லி, மார்ச் 30—

நிதி மந்திரி சி. டி. தேஷ்முக் வெகு விரைவில் பதவியைவிட்டு விலகி விடலாம் என்று வதந்திகள் உலவுகின்றன; ஆனால், இவ்வதந்திக்கு ஆதாரமோ அல்லது மறுப்போ இல்லை

நாட்டின் நிதிக்கொள்கை சம்பந்தமாக சமீபத்தில் அவர் சர்க்காருடன் பல தடவை கருத்து வேற்றுமை கொள்ள நேரிட்டது என்று கூறப்படுகிறது.

கடந்த காலத்தில் கருத்து வேற்றுமைகள் தோன்றியபோதிலும் அவற்றைப் போக்க முயற்சிகள் நடைபெறுகின்றன என்றும் சொல்லப்படுகிறது.

கான் சாகிபுக்குக் கவர்னர் பதவி?

லண்டன், மார்ச் 29—

எல்லை காந்தியின் சகோதரர் டாக்டர் கான் சாகிபை பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் எல்லை மாநில கவர்னர் பதவியை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டனர் என்றும், அதை அவர் மறுத்துவிட்டார் என்றும் தெரிகிறது.

ரூ. 15 கோடி முதலீடு!

புதுடில்லி, மார்ச் 30—

நேபாளத்தில் இந்தியர்களால் முதலீடு செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ 15 கோடி என்று மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 31—3—54 புதன்

ஆசிரமத்து மாப்பிள்ளை!

★

சாந்தம், சன்மார்க்கம் தழைக்குமிடம்! ஜீவன் முக்தர்களின் வாழ்விடம்! அன்பும் அருளும் ஒளிவிடும் கோட்டம்!—என்றெல்லாம் புகழப்பட்ட அரவிந்தர் ஆசிரமம் புதுவையில் இருப்பதை அனைவரும் அறிவர். அந்த ஆசிரமத்து மாப்பிள்ளையாம், இதுபோது புதுவையில் பேயாட்சி நடத்தும் கவர்னர் மேனன்.

ஆசிரமத்துக்கு வந்திருந்த ஒரு ஐரோப்பிய பெண்ணைக் கடிமணம் புரிந்துகொண்டாராம் மேனன். இப்போதும் ஆசிரமத்துக்கு அடிக்கடி போய் வருகிறாராம். ஆசிரமத்திலே இருந்துவந்த சுத்தானந்த பாரதியார் இந்தத் தகவலைத் தருகிறார். அரவிந்த ஆசிரம நறுமணம் அகந்தையை அகற்றி, ஆத்மார்த்தத்தை வளப்படுத்தி, அன்பு நெறியைத் தழைத்திடச் செய்ய உதவும் என்று எடுத்துக் கூறப்பட்டது; அந்த நறுமணத்தையும் ஒரு நாரீமணியையும் காணிக்கையாகப் பெற்ற கவர்னர் மேனனின் இப்போதைய போக்கு, மக்களாட்சியிலே வேட்கை மிகுந்த எவரையும் திடுக்கிடச் செய்வதாக இருக்கிறது. ஆசிரம நறுமணம், பயன் தந்ததாகத் தெரியவில்லை—ஒரு வேளை, அந்த நறுமணத்துக்கு உள்ள வலிவு அவ்வளவுதான் போலும்!

ஆசிரமத்து மாப்பிள்ளை இப்போது அடால்ப் ஹிட்லர் வழி செல்ல முனைகிறார். காரில் பவனியாம்; காட்டுக் கூச்சலாம்; எதிர்ப்பட்டோரை ஏசுகிறாராம்; எங்கள் ஆட்சியை என்ன செய்ய முடியும் என்று எக்காளமாம்; வீடு புகுவதாம்; வீண் வம்பு பேசுவதாம்; போலீஸ் வருவதற்கு முன்பு போக்கிரிகள் போடும் கூச்சல்போல மேனனின் முழக்கம் இருக்கிறது!

ஒவ்வொரு 'கம்யூனை', விடுவிப்போம்! விடுவிப்போம்! என்று பரணி பாடுகின்றன—தடைகள் தூளாகின்றன! தன்னலத்தை உதறித் தள்ளிவிட்டுத் தலைவர் பலர் ஒன்று கூடி நிற்கின்றனர். தியாகத் தழும்பேற்ற தொண்டர்கள் பல்லாயிரவர் திரண்டுள்ளனர். விடுதலை நிச்சயம் என்பதற்கான அறிகுறி தெளிவாகத் தெரிகிறது. எனினும், கவர்னர் மேனன் கர்ஜனை செய்கிறார்! பிரான்சிலே, மக்களாட்சிக்கான புரட்சி பூத்திடுவதற்கு முன்பு, மேனனைவிட உண்மையாகவே அறிவாற்றலில் மேம்பட்டவர்கள் பலர், இதுபோலக் கூவினர்; கொக்கரித்தனர்; கடைசியில் வெட்டுப் பாறையில் தலையைச் சாய்த்தனர். மேனன், சிறிது அவகாசம் கண்டு பிடித்து, அந்தச் சம்பவத்தை, வரலாற்று ஏட்டிலே படித்திட வேண்டும்.

மேனனின் போக்குக்கு என்ன காரணம்? எங்கிருந்து இந்தத் துணிவு பிறக்கிறது? ஏன், மக்களின் ஒருமித்த கிளர்ச்சி உருவெடுத்திருப்பதைக் கண்டும், போக்கு மாறவில்லை?

இரு சபலங்கள் உள்ளன அவர் போன்றார் உள்ளத்தில்; மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, அவை தக்கனவாகவும் தோன்றக்கூடும். ஒன்று, நேரு சர்க்கார், துணிந்து எந்தச் செயலிலும் ஈடுபடமாட்டார்கள் என்பது; இந்த எண்ணம் மேனனுக்கு ஏற்பட்டதற்குக் காரணம், நேரு சர்க்கார் இந்தப் பிரச்னையில் இதுவரையில் காட்டிவந்த 'முதுகெலும்பற்ற' போக்குதான். நேரு சர்க்கார், தன் 'ராஜதந்திரப்' படை வரிசையை இந்தத் துறையிலே தக்க வகையில் இதுவரை பயன்படுத்தவில்லை. எனவேதான், மேனன் போன்றார் இப்போதும், உருட்டல் மிரட்டலினாலேயே இந்திய சர்க்காரை பணிய வைத்து விடலாம் என்று சபலம் கொள்கிறார்கள். ஆனால், இம்முறை, மேனன்கள் ஏமாறத்தான் போகிறார்கள். இவ்வளவு மகத்தான மக்கள் எழுச்சி, இந்திய சர்க்காருக்கு, என்றும் இல்லாத அளவில், உறுதியையும் ஊக்கத்தையும் தந்திருக்கிறது.

மற்றோர் சபலம் ஏற்படுகிறது, மேனனுக்கு.

அகில உலகை ஆட்டிப்படைக்கலாம் என்று மனப்பால் குடிக்கும் டாலர் தேவதையின் துணை கிடைக்கும், கடைசி நேரத்தில் அமெரிக்க உதவி பெறலாம்—என்று எண்ணுகிறார் போலும்!

அமெரிக்கா, உலகிலே பல்வேறு இடங்களிலே அரும்பும் விடுதலை உணர்ச்சியைக் கருவறுக்கும் காரியத்தில் ஈடுபட்டு இருக்கிறது — எனவேதான், உலகின் முற்போக்கு முகாம் அத்தனையும், அமெரிக்கப் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறது. பிரெஞ்சு ஏகாதிபத்யம் சரிந்து போகாமல் முட்டுக்கொடுக்க, அமெரிக்கா முன்வரக்கூடும்; இங்கு ஒரு 'கொரியா' நடத்திப் பார்க்கலாம் என்ற சபலம் மேனனுக்கு ஏற்பட்டிருக்கலாம்.

'விடுதலை' சாமான்யமான விலை கொடுத்து வாங்கக்கூடிய சரக்கு அல்ல — அதற்கு எத்தனை அளவிலே இரத்தக் காணிக்கை செலுத்த வேண்டுமோ அத்தனையையும் செலுத்த மக்கள் தயாராகிவிட்டனர், என்பதை அதிகார மதம் உண்டு, அகந்தை மாளிகையிலே வீற்றிருக்கும் துரைமகனால் உணர்ந்துகொள்ள முடியாது.

பட்டம் உண்டு பதவி உண்டு, பாரிஸ் பயணம் உண்டு பலவகை மது உண்டு, என்று பன்னிப்பன்னிக் கூறியும், இதுவரை ஒருவராவது பல்லிளிக்காதது கண்டு, என்பதாவது பாடம் தந்திருக்க வேண்டாமா இந்த மேனனுக்கு! பல்லிழந்த பட்டாளத்துக்காரர் சிலருக்குப் பானவகை கொடுத்து, பாக்கு வாடச் சொல்லிப் பரிபாலனம் செய்து கொண்டிருக்க முடியுமா! 'போட்டி சர்க்கார்' அமைக்கும் அளவுக்கு நிலைமை வளர்ந்துவிட்டது; போக்கிரிகளைக் கொண்டா அதனை அடக்கிவிட முடியும்! மேனன் கொண்டுள்ள சபலம், பிரெஞ்சு அரசுக்குப் பெரும் அவமானத்தைத் தேடித்தரவே உதவும்.

வாயில் இரத்தம் சொட்டச் சொட்ட ஓடிவரும் குட்டியை நாவினால் தடவிக் கொடுத்து, பரவாயில்லை, வேட்டையாடி இரத்தம் குடிக்கும் வித்தை தெரிந்துவிட்டது என்று மகிழும் கிழப் புலிபோல, இந்தோ-சீனாவில் இரத்த வேட்டை நடாத்தும் பிரெஞ்சுக்காரர்களை, வீரரே! தீரரே! வெஞ்சமரில் சூரரே! என்று, பாராட்டுகிறார், அமெரிக்கத் தலைவர் ஐசன்ஹவர். அதுபோலவே, புதுவையில் பிரெஞ்சு சர்க்கார், வெறியாட்டம் நடாத்தினால் பாராட்டுதலும் ஆதரவும் அமெரிக்காவிடமிருந்து கிடைக்கும் என்று மேனன் மனப்பால் குடிக்கிறார் போலும்!

நேரு சர்க்கார், இனியும் கால தாமதம் செய்தலாகாது. 'ராஜதந்திர'த் துறையிலே வெற்றி காண, இதைவிடச் சிறந்த வாய்ப்பு வேறு கிடைக்க முடியாது. மக்கள் திரண்டுவிட்டனர்; இனி ஆளவந்தார்கள் அறிவாற்றல் காட்ட வேண்டும்; ஆசிரமத்து மாப்பிள்ளையின் கொட்டம் அடக்கப்பட்டாக வேண்டும்.

அதுவும் இல்லையே!

★

ஆந்திர மாகாணம் பெற நடைபெற்ற கிளர்ச்சியில் ஈடுபட்டு, போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தால் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு, சர்க்கார், நஷ்ட ஈடுத் தொகை ஏதேனும் தந்ததா?—என்று ஆந்திர சட்டசபையில் கேட்கப்பட்டது.

"சட்டப்படி தர வேண்டும் என்பது இல்லை; ஆனால், மனிதாபிமானத்தை எண்ணி உயிரிழந்தோரின் குடும்பத்தினரில் நால்வருக்கும், காயமடைந்த ஒருவருக்கும் சர்க்கார் பண உதவி அளித்திருக்கிறது" என்று ஆந்திர முதலமைச்சர் பிரகாசம் நேற்று பதிலளித்திருக்கிறார்.

தனி மாகாணம் பெற கிளர்ச்சி நடைபெற்றகாலை, அஞ்சாநெஞ்சினர்! ஆற்றல் மிக்கவர்! தேச பக்தர்கள்! தியாக திலகங்கள்!—என்று அர்ச்சித்த ஆந்திரச் சிங்கம், சட்டம் பேசுகிறது, சட்டம்!!

உயிரிழந்தோர், உறுப்பிழந்தோர் தேடித் தந்த பதவியில் சாய்ந்ததும் இந்தப் பிரகாசப 'பண்பு' பிறந்துவிடுகிறது! தனி மாகாணக் கிளர்ச்சிக்காகத் தமது உயிரையே காணிக்கையாகத் தந்தவர்களின் குடும்பத்தினருக்கு உதவித் தொகை சட்டப்படி தரவேண்டியதில்லை எனச் சாற்றுகிறார். சட்டம் என்பது என்ன? தேவைக்குத் தக்கபடி வகுத்துக் கொள்ளவேண்டிய ஒழுங்கு முறைதானே சட்டம்! தியாகிகளுக்காக, சட்டத்திலே இரண்டோர் புது 'அயிட்டங்'கள் சேர்த்திடவா முடியாது? சட்டத்தின் நுணுக்கம் தெரியாததால் அல்ல, காரியம் முடிந்துவிட்டது என்ற எண்ணத்தால், பிரகாசம் அவ்விதம் பேசுகிறார். போகட்டும், சட்டப்படி கட்டுப்பட்டவர்களல்ல எனினும், மனிதாபிமானத்துக்காக ஏதோ உதவித் தொகையைத் தந்திருக்கிறார். அதுவும் இல்லை, இங்கு!

தூத்துக்குடி, கல்லக்குடி துப்பாக்கிப் பிரயோகத்தால் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் குறித்து, ஒரு துளி மனிதாபிமானமும் காட்ட மறுக்கிறது, சென்னை சர்க்கார். உறுப்பு இழந்தோரும் உளர். சர்க்காரோ இதை ஒரு கவனிக்க வேண்டிய பிரச்னை என்றேகூடக் கருதக் காணோம். பிரகாசங்காருவாவது, சட்டம் பேசிவிட்டு, சிறிதளவு மனிதாபிமானம் காட்டினார்; இங்கு அதையும் காணோம்.

துப்பாக்கிப் பிரயோகத்தால் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடுத் தொகை தரவேண்டியதை வலியுறுத்தி, நூற்றுக்கணக்கான பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன; சர்க்கார், கவனிக்க மறுக்கிறது.

ஆந்திராவில் நடைபெற்ற கிளர்ச்சி போலவே, இங்கு நடைபெற்ற ஜூன் கிளர்ச்சியும். குறிக்கோளுக்காக, கொள்கைப் பற்றுடையோர் எடுத்துக்கொண்ட தன்னலமற்ற அறப்போராகும். அதன் மாண்பினை மதிக்க மறுக்கலாம் சிலர்; அது எம்மாத்திரம் என்று வீம்பு பேசலாம் சிலர்; அது சரியான முறையிலே நடைபெறவில்லை என்று விமர்சனம் அருளலாம் வேறு சிலர்; ஆனால் பண்புள்ள எவரும், அந்தக் கிளர்ச்சியை, ஒரு பொதுநல நோக்குடையாரின் கிளர்ச்சி அல்ல என்று கூறத் துணியார். அத்தகைய ஒரு கிளர்ச்சியின்போது, தேவையற்ற முறையிலும், தீமை பயக்கும் அளவிலும், சர்க்கார் அடக்குமுறையைக் கையாண்டதன் விபரீத விளைவாகவே சிலர் இறந்துபட்டனர். துரைத்தனத்தாரின் துப்பாக்கிக் குண்டு துளைத்து, சிலரைக் கொன்றிருக்கிறது; அவர்களுடைய குடும்பத்தினரின் கண்ணீரைக் காணவும் மனமில்லை, இந்த சர்க்காருக்கு! அரசியல் நாகரீக உணர்ச்சிக்காகவாவது, அந்தக் குடும்பங்களுக்கு உதவித் தொகை தந்திருக்க வேண்டும். ஆந்திராவில் தந்தனர், அதைக் கண்ட பிறகாகிலும், சென்னை சர்க்காருக்கு நல்லெண்ணம் பிறக்குமா?

சட்டப்படி அல்ல; மனிதாபிமானத்துக்காகத் தருகிறோம் என்று பிரகாசம் பேசுகிறார்—இங்கு அதுவும் இல்லையே! என்ன செய்வது!!

களங்கம்

★

வடநாட்டிலேதான், இந்து—முஸ்லீம் பிணக்கு, மசூதி, மேளம் என்ற பெயரில் நாற்றமடிக்குமளவு கிளம்பும்; பிணம் பல கீழே விழும்; இரத்தம் ஓடும்; அன்பும் அறமும் அழிந்துபடும்; காட்டுமிலே ஏறிடும்; பிறகு, தய்யாக்கிப் பேசும்; துரைத்தனம் தாக்கும்; பிறகே கலகம் மடியும்.

இது, நமது தென்னாட்டிலே தலை காட்டாது என்று, பெருமை கொள்கிறோம், உரிமையோடு!

அந்த நற்பெயருக்கு மாசு ஏற்படும்படியாக கோழிக்கோடு அருகே மசூதி முன் மேளம் என்ற பெயர் கூறிக் கொண்டு கலகம் விளைவித்து களங்கம் ஏற்படுத்தி உள்ளனர்.

சென்ற கிழமை நடைபெற்ற இந்த நெறிமுறையற்ற செயலை, அறிவுடையார் அனைவரும் கண்டிக்கத்தான் செய்வர்.

மனிதனுக்குள் எப்போதும் பதுங்கியபடி இருக்கும் மிருக உணர்ச்சியை, அடக்கி ஆளத் தெரியாமலிருப்பது, அறிவுடைமையாகாது.

மதத்தின் பெயர் கூறிக் கொண்டு மிருகத்தனத்தைப் புகுத்துவது மன்னிக்கப்பட முடியாத பாதகமாகும்.

திராவிடப் பூங்காவிலே, அந்தப் பாதகம் தலைகாட்டலாகாது தலைகாட்ட அனுமதிக்காதீர்.

தென்னாட்டிற்கு மற்றுமோர் வாய்ப்பு!

புதுடில்லி, மார்ச் 30—

தென்னாற்காட்டில் கிடைக்கும் 'லிக்னைட்'டைக் குறைவான உஷ்ணநிலையில் கரியம் ஆக்குவது சம்பந்தமாக சென்னை சர்க்கார் லிக்னைட் ஆராய்ச்சியாளர்கள் நடத்திவந்த பரிசோதனைகள் வெற்றியளித்துள்ளன.

இந்தியாவில் உயர்ந்த ரக 'கோக்கிங்' நிலக்கரி மிகக் குறைவாகவே இருக்கிறது; ஆனால், மட்டரக நிலக்கரி பெருமளவில் கிடைக்கிறது. இந்த மட்ட ரக நிலக்கரிகளை உலோக உற்பத்தி வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் விஷயத்தில் சமீப காலமாகத் தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது.

தென்னிந்தியாவில் நிலக்கரிச் சுரங்கம் எதுவும் கிடையாது; ஆனதால் தொழிற்சாலைகளின் உபயோகத்துக்கும் வீடுகளில் உபயோகிப்பதற்கும் தேவையாயிருக்கும் நிலக்கரி முழுதும் வெடுந்தூரத்திலிருந்தே வரவேண்டியிருக்கிறது. கரியம் ஆக்கப்பட்ட (அதாவது சுட்ட) 'லிக்னைட்', சாதாரண மரக்கரிக்கு உள்ள தன்மைகளைப் பெற்றிருப்பதாகவும். தொழிற்சாலைகளிலும், வீடுகளிலும் எரிபொருளாக உபயோகிப்பதற்கு மிகவும் ஏற்றதாக உள்ளதாயும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே தென்னாற்காட்டில் மொத்தம் சுமார் 200 கோடி டன் வரை கிடைக்கக்கூடுமென்று மதிப்பிடப்பட்டுள்ள 'லிக்னைட்' படிவுகளை சரியானபடி பயன்படுத்திக் கொள்வது, தென்னிந்தியாவுக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததொரு விஷயமாகும்.

மதுரை, மார்ச் 29—

மதுரை மீனாட்சி மில்லில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக சுமார் ரூ. 40,000 மதிப்புள்ள சொத்து சேதமடைந்தது.

டாட்டாவின் புதிய படையெடுப்பு

—(:)—

வால்கார்ட் கம்பெனிக்கு பங்காளியாகிறது

—(:)—

கூட்டுக் கொள்ளைக்கு காங்கிரஸ் ஆசி

இலாப வேட்டைக்காரர்கள், தொழில் பல நடத்தி, பல இலட்சம் மக்களின் உழைப்பை உறிஞ்சி, இலாப வேட்டையாடிக் கொழுக்கிறார்கள்—அதிலும் குறிப்பாக. அன்னியக் கம்பேனிகள் கொட்டமடிக்கின்றன; சுயராஜ்யம் கிடைத்ததும், இந்த அன்னியக் கம்பேனிகளைக் கலைத்து, இலாப வேட்டையை ஒடுக்குவோம் என்று, காங்கிரஸ் தலைவர்கள் முழக்கமிட்டனர்.

இப்போது அன்னியக் கம்பேனிகளில் இந்திய முதலாளிகள் கூட்டு சேர்ந்து இலாபவேட்டை நடக்கிறது; காங்கிரஸ் சர்க்கார் இதை ஆசீர்வதிக்கிறது.

1851-ம் ஆண்டு முதல் இங்கு தொழில் நடத்திக் கொண்டு வரும், ஸ்விட்சர்லாந்து நாட்டுக் கம்பெனியான வால்கார்ட் கம்பெனி, இப்போது, டாடா கம்பெனியுடன் இணைந்து தொழில் நடத்த ஏற்பாடாகி வருகிறது.

டாட்டா கம்பெனியும் வால்கார்ட்டும் கூட்டாகச் சேர்ந்து 70,00,000 ரூபாய் மூலதனம் வைத்து இனி, தொழில் நடக்குமாம்.

டாட்டா கம்பெனிக்கு பாதிக்கு மேல் பங்கு இருக்கும்.

டாட்டா கம்பெனி ஏற்கனவே செய்து வரும் எஃகு உருக்கு போன்ற பல தொழில்களை நடத்தி வருவதுடன், வெளிநாட்டார் அமைத்திருக்கும் தொழில் அமைப்புகளிலும் பங்காளியாகி வருகிறது.

இதை இந்திய சர்க்கார் ஆதரித்து, ஆவன செய்வதாக வாக்களித்திருக்கிறது.

ஸ்விட்சர்லாந்து நாட்டவரின் வால்கார்ட் கம்பெனியுடன் கூட்டு சேர்ந்திருப்பது போலவே, டாட்டா கம்பெனி ஏற்கனவே, மோட்டார் உற்பத்தித் தொழிலில் ஈடுபட, மெர்சிடிஸ் எனும் ஜெர்மன் கம்பெனியுடன் கூட்டாகச் சேர்ந்திருக்கிறது.

டாட்டாவின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பல தொழில் அமைப்புகளிலே குவிந்துள்ள பணத்தைக் கொண்டு மேலும் பல தொழில்களில் கூட்டு சேர, டாட்டாவுக்கு வசதி கிடைத்திருக்கிறது.

ஊர்வலம் சென்றவர் மீது கண்ணீர்ப் புகை

ஐதராபாத், மார்ச் 29—

தொழில், வியாபார மந்திரியைச் சந்தித்து தங்கள் கோரிக்கைகளைக் கொண்ட மகஜர் ஒன்றை மந்திரியிடம் தருவதற்காக ஹைதராபாத், நூற்றல் நெசவு ஆலைத் தொழிலாளர்கள் 500 பேர் ஊர்வலமாக சட்டசபைக்குள் நுழைந்தபோது போலீசார் அவர்கள்மீது கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர்.

சட்டசபையைச் சுற்றி 500 கஜ தூரத்திற்கு கூட்டங்களோ ஊர்வலங்களோ நடத்தக்கூடாதென்ற தடை உத்தரவும் உள்ளது. கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தினால் ஊர்வலம் அங்கும் இங்குமாகச் சிதறிற்று. கம்யூனிஸ்டு தலைமையின்கீழ் உள்ள எல்லா ஐதராபாத் தொழிற் சங்கக் காங்கிரசினால் அந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.

தோழர் கமலேக் ராம் என்ற ஊர்வலத்தைத் தலைமை தாங்கி நடத்திவந்த தொழிற் சங்கத் தலைவரை, போலீசார் கைது செய்தனர்.

ஊர்வலம் சென்றவர்கள், கம்பு, கல், செங்கல் முதலியன வைத்திருந்தார்கள் என்றும், ஊர்வலம் கலைக்கப்பட்டபோது, அவர்கள் போலீசார்மீது கற்களை வீசியதினால் சில போலீசாருக்கு காயங்கள் ஏற்பட்டதாகவும் போலீசார் தெரிவித்தனர்.

ஒரிசாவில் தங்கம்!

புதுடில்லி, மார்ச் 29—

ஒரிசாவில், சுமார் 40 மைல் நீளமும், ஒரு மைல் அகலமும் உள்ள நிலத்தில் தங்கம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும், 1953-ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலை நடைபெற்று வருவதாகவும், கற்களை சுத்தம் செய்து பார்த்ததில் ஒரு டன் கல்லில் மூன்றிலிருந்து நாலு கிரெயின் தங்கம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாகவும் மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

புதுடில்லி, மார்ச் 29—

ஜம்முவில், இரவு நேரத்தில் ஒரு நதியைக் கடப்பதற்கான பயிற்சி நடைபெற்றபொழுது தற்செயலாக ஒரு ஜூனியர் கமிஷன் அதிகாரியும், மற்றும் இதர அந்தஸ்துள்ள 42 பேரும் நீரில் மூழ்கிவிட்டதாகக் கூறப்படுகிறது.

ஜாதி ஒழிந்தால்தான் — தீண்டாமை ஒழியும்

—o—

ஆப்பிரிக்க நிறபேதம் கண்டிக்கிறோம் ‘சேரிகள்’ இங்கு உள்ளனவே; சரியா?

ஜகஜீவன்ராம் முழக்கம்

★

“நாம் ஆப்பிரிக்காவில் நடக்கும் இன வெறியையும், கொடுமைகளையும் பற்றிக் குறைபடுகிறோம்—கண்டிக்கிறோம்; ஆனால், நமது நாட்டின் நிலை என்ன? அரிசன மக்களுக்கென தனி காலனி (சேரி)களை ஒவ்வொரு பிரதேசத்திலும் வைத்திருப்பதின்மூலம் அத்தகு நிறபேதக் கொடுமைகளை இங்கே நாம் மேற்கொண்டு இருக்கிறோம்.”

“தீண்டாமைக்கு இந்தியாவில் முடிவு கட்டப்பட்டுவிட்டதாக நினைப்பது தவறு; அப்படி நினைப்பவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டவராவர்.”

—இவ்வாறு, டெல்லி மாநில, தீண்டாமை எதிர்ப்பு இயக்கத்தைத் துவக்கிவைத்த யூனியன் மந்திரி ஜகஜீவன்ராம் அவர்கள் குறிப்பிட்டுவிட்டு, “இங்கே ஜாதி முறை நிலவும் வரை தீண்டாமை அழிக்கப்பட முடியாதது,” எனக் கூறினர்.

பம்பாய்க்காரர் படுத்தும் பாடு!

முந்திரித் தொழில் — மூடப்படுகிறது

கோளத்தில் கோரக் காட்சி

கேட்க டில்லிக்கு மனமும் இல்லை

கொல்லம், மார்ச் 28—

தென்னாட்டிலே தொழிற்சாலைகள் அரும்புவதே கஷ்டமாக இருக்கிறது.

வெளிநாட்டாரும், வடநாட்டு முதலாளிகளும் கூட்டுக் கம்பெனிகள் அமைத்துக் கொண்டு, இலாப வேட்டை ஆடுகிறார்கள்

கூலிகளாகவும், விவசாயிகளாகவும் இருந்து உழல்கிறார்கள் திராவிட மக்கள்.

தப்பித் தவறி சில தொழில்கள் நடைபெற வழி கிடைத்தாலும், வடநாட்டு முதலாளிகளின் பிடி பலமாகிறது, பிழைப்பது முடியாது என்று ஆகிறது, தொழில் நாசமாகிறது.

கேரள நாட்டு முந்திரித் தொழிலில், இப்போது, நெருக்கடி முற்றி, தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. காரணம் என்ன என்பதை தொழிலில் ஈடுபட்டோர் விளக்கியுள்ளனர்.

1953-ம் ஆண்டு இறுதியில் கேரளத்தில், முந்திரிக் கொட்டை உடைக்கும் தொழிற்சாலை 130 இருந்தன. 80 000 பேருக்கு இதிலே பிழைப்பு நடந்து வந்தது. இதில் பெரும்பகுதி, பெண்கள், சிறுவர்கள்.

இதில் இப்போது 75 மூடப்பட்டுவிட்டன.

30,000 பேருக்கு வேலை போய்விட்டது.

வேறு பலவும் மூடப்பட வேண்டிய நிலையில்தான் உள்ளன.

காரணம், போதுமான மூலதனம் வைக்க வசதி கிடைக்கவில்லை. இதுமட்டுமல்லாமல், இங்கு இந்தத் தொழில் நடப்பது, பம்பாய்க்காரரின் தயவைப் பொறுத்துத்தான் இருக்கிறது. வெளியே இருந்து முந்திரிக் கொட்டையை இறக்குமதி செய்து விற்கும் உரிமையை பம்பாய் வியாபாரிகள் பெற்றுள்ளனர். அவர்களிடம் முந்திரி வாங்கித்தான் தொழில் நடத்தவேண்டி இருக்கிறது. பம்பாய்க்காரர் வைத்தது தான் சட்டம். அவர்கள் பிடியிலே சிக்கியே தொழில் சீரழிகிறது.

பம்பாய்க்காரர்கள் ஆப்பிரிக்காவிலிருந்து ஏராளமாக முந்திரி வரவழைக்கிறார்கள்.

அதே முறையில் இங்குள்ள தொழிற்சாலையினர், நேராக ஆப்பிரிக்காவிலிருந்து முந்திரி வரவழைத்துக் கொள்ள இறக்குமதி லைசென்சு தரும்படி இந்திய சர்க்காரிடம் விண்ணப்பித்தது, பயனற்றுப் போய்விட்டது.

10,000 டன் முந்திரி சில நாட்களுக்கு முன் கொச்சி துறைமுகம் வந்தது; வாங்குவார் இல்லை; காரணம் பம்பாய்க்காரர் அதிக விலை கேட்பது தான்.

தொழில் நசித்துவருகிறது; வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகிறது.

வெட்டுக்கிளி படையெடுப்பு

புதுடில்லி, மார்ச் 29—

1953-ம் ஆண்டில் சுமார் 650 டன் உணவு தானியங்கள் வெட்டுக் கிளிகளினால் சேதமாயிற்று என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

வெட்டுக் கிளிப் படையெடுப்புகளினால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுள் மிகவும் அதிகமான சேதம் ஏற்பட்டது பீஹார் மாநிலத்தில் தான்.

சென்னை, மார்ச் 29—

விவசாயிகள், பரதவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த 166 நபர்கள் ‘எஸ். எஸ். மகாராஜா’ என்ற கப்பலின் மூலம் அந்தமானில் குடியேறி வாழ்வதற்காக புறப்பட்டனர். குடியேற புறப்பட்டவர்களில் பலர் மேற்கு கடற்கரையைச் சேர்ந்தவர்கள்.

வேட்டப்பட்டி பஞ்சாயத்து போர்டு

வேட்டப்பட்டி, மார்ச் 30—

22—3-54 அன்று பஞ்சாயத்து போர்டு கூட்டம் தலைவர் வி. பெருமாள் நாயுடு தலைமையில் நடைபெற்றது. அரசமயம் போர்டின் உபதலைவர் வி. மருதப்ப கவுண்டர் 5—3—54ல் காலமானதை யொட்டி ஓர் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கலெக்டருக்கு மகஜர்

வேலூர் (வ. ஆ.), மார்ச் 27—

வாணியம்பாடி பிர்க்கா விவசாயிகள் சங்க சார்பில், பத்து பேரடங்கிய தூதுக் குழு ஒன்று, கலெக்டரைச் சந்தித்து, வாணியம்பாடி பாலாறு அணைக்கட்டு திட்டம், நகரில் கம்பளித் தொழிற்சாலையை உடன் திறத்தல், உயர்தர பாடசாலை ஏற்படுத்தல், கால்வாய் வெட்டல் மற்றும் பல கோரிக்கைகள் அடங்கிய மகஜரைச் சமர்ப்பித்தனர். கலெக்டர், ஆவன செய்வதாக வாக்குறுதி யளித்தார்.

‘இந்தியை திணிக்காதே’

—(:)—

‘வளமோ, வன்மையோ இல்லாதது இந்தி!’

இந்தி வெறியருக்கு இலக்கியப் பேராசிரியர் சீதாராமையா எச்சரிக்கை

தார்வார், மார்ச் 29—

மாநில அரசுகள் மக்களின் மீது இந்தியைத் திணிப்பதில் அவசரப் படுவதை, கன்னட இலக்கிய மாநாட்டுத் தலைவரான பேராசிரியர் வி. சீதாராமையா கண்டித்தார்.

காடக் ரோட்டரி கிளப் ஏற்பாடு செய்து நடத்திய பல பிரதேச இலக்கிய மாநாட்டில் தலைமை தாங்கிப் பேசிய அவர் மேலும் குறிப்பிட்டார்:—

“இந்தியினுடைய உண்மையான தன்மைகளை, அறியாதவனல்ல நான். இந்தி வளமுள்ளதாகவும், பூரணமாக, எல்லா மக்களுக்கும் பொருந்தக்கூடிய வகையில் வளர்ந்துள்ளதாகவும் இருக்குமானால் அதை ஆதரிப்பதில் நமக்கொன்றும் தடையில்லை.

“ஆனால் இந்தி, இந்தியாவில் உள்ள வேறெல்லா மொழிகளைக் காட்டிலும் குறைபாடுடையதும் சில வழிகளில், ஒழுங்கற்றதாகவும் விகாரமானதாயு மிருக்கிறது என்பதை இந்தியைப் புகுத்துபவர்கள் மறந்துவிடக் கூடாதென எச்சரிக்கிறேன்.

ஆங்கிலத்திற்குப் பதிலாக அப்படியே இந்தியை ஏற்றுக்கொள்வதினால் எவ்வளவு பெரியதொரு கஷ்டத்தை அடைவோம் என்பதைச் சுட்டிக்காட்டினார் அவர்.

“இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களின் இலக்கிய ஆற்றல் இரண்டாந்தர, மூன்றாந்தரமானதாகத்தான் இருக்கும். அதிகமான உபயபலன் தரும் ஒரு நிறை நன்னிலை குறைந்த, டலவில்லாத நிலையில் இருப்பது பொருட் சிக்கனமானதல்ல

எனவே இந்திப் பிரியர்கள், இன்னும் இந்தி நல்ல வளமும், பலமும், பலராலும் போற்றப் படும் நிலையையும் அடைகிறவரை, இன்னும் இரண்டொரு தலைமுறைகளுக்காவது பொறுத்திருந்து ஆங்கிலத்தின் இடத்தில் இந்தியை நிலை நிறுத்த நினைக்கலாம். அப்பொழுது வேண்டுமானால் இந்த மாற்றம் செய்யும் முயற்சி, இப்பொழுதைப் போலன்று, விழுப்பமிக்கதாக இருக்கலாம்.

பெரும்பாலான மக்கள் புரிந்துகொண்டு கருத்துத் தெரிவிப்பதை அதிகப்படுத்துவது தான், 14 பெரும் பிரதேச மொழிகளைக் கொண்ட ஒரு நாட்டின் சரியான முன்னேற்றப் பாதையாகும்.

இதைப் பெறுவதற்கு, கலையும் கல்வியும் அரிதமாகவும் செலவுக் குறைவாகவும் பரப்பப்பட வேண்டும்.

பிரதேச மொழிக்கும், தேசிய மொழிக்கும் எவ்விதத் தொடர்பும், சம்மந்தமும் இல்லாத இடங்களில், இந்தியை பலவந்தமாக அரசாங்கம் திணிப்பதை நான் தவறெனக் கொண்டு, எச்சரிக்கிறேன்,” என்று அவர் குறிப்பிட்டார்.

சென்னை சட்டசபையில் கேள்வி நேரம்

★

அரிசி பற்றாக்குறை

சென்னை, மார்ச் 30—

"இவ்வாண்டு சென்னை மாநிலத்தில் அரிசி பற்றாக்குறை நான்கு லட்சம் முப்பதாயிரம் டன்; குடகிலிருந்தும் ஓரளவு அரிசியை மத்திய சர்க்கார் சென்னைக்கு ஒதுக்கியிருக்கின்றனர்; அதிலிருந்து 14,000 டன் அரிசி மலபாருக்கு ஒதுக்கப்பட்டது; தென் கன்னடத்துக்கு இரண்டாயிரம் டன் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது," என்று சென்னை சட்டசபையின் நிதி மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

★

பெண் அதிகாரிகள்

"சென்னை மாநிலத்தில் தற்போது கெஜட் பதிவான பெண் அதிகாரிகள் 282 பேர் இருக்கின்றனர்," என்று நிதி மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

கேள்வி:— "பெண்களுக்கே வேலையளிப்பதென்றால் படித்த ஆண் பிள்ளைகள் கதி என்ன?"

மந்திரி:—"கவலை வேண்டாம்; சம்பாதிக்கும் பெண்கள் தங்கள் கணவன்மார்களைக் காப்பாற்றுவர்.

★

ஆரம்ப ஆசிரியர் சம்பள உயர்வு பிரச்னை

"ஆரம்ப ஆசிரியர்கள் சம்பள உயர்வு சம்பந்தமாக நிபுணர் கமிட்டி செய்திருக்கும் சிபார்சு சர்க்காரின் கவனத்தில் இருக்கிறது," என்று நிதிமந்திரி தெரிவித்து மேலும் சொன்னதாவது:—

"புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் காரணமாக ஆசிரியர்களுக்கு வேலை அதிகமாகிவிட்டது என்று கூறுவதை சர்க்கார் பூராவும் ஒப்புக்கொள்ள முடியாது; எப்படியும் வேலை அதிகரித்திருக்கிறதே என்பதற்காக சம்பள உயர்வில் கவனம் செலுத்தவில்லை; ஆசிரியர்களுக்கு குறைந்தபட்ச சௌகரியமாவது செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காகவே யோசனை செய்யப்படுகிறது."

★

கொயினா இலாகாவில் ஏற்பட்ட நஷ்டம்

"1952—53-ல் உதகையில் கொயினா இலாகாவில் சர்க்காருக்கு ஏற்பட்ட நஷ்டம் ரு 3,26 345 என்றும். இலாகா, கொயினா தொழிற்சாலை எதிர்காலத்தை சர்க்கார் ஆராய்ந்து வருகின்றனர்," என்றும் விவசாய இலாகா மந்திரி கூறினார்

★

விற்பனை வரி செலுத்தாதவர்கள் 9,544 பேர்!

"1951—52-ல் விற்பனை வரி செலுத்தத் தவறியதாக 9544 பேர் தண்டிக்கப்பட்டனர்; வரி பாக்கியை வசூலிக்க 829 பேர் விஷயத்தில் ஜப்தி வாரண்டு பிறப்பிக்கப்பட்டது," என்று ரெவின்யூ மந்திரி கூறினார்.

★

வள்ளுவக்குடியில் விசேட போலீஸ்!

"தஞ்சை மாவட்ட சீர்காழி தாலுகா வள்ளுவக்குடியில் விசேட ஆயுதந்தரித்த போலீசுப் படை நிறுத்தப்பட்டது உண்மை; அப்பகுதி மக்களுக்குப் பாதுகாப்பளிப்பதே அவ்விதம் ஏற்பாடு செய்யப்பட்டது," என்று நிதி மந்திரி சுப்பிரமணியம் அறிவித்தார்.

ராஜபாளையம் மில் தொழிலாளர்கள் கைது

சென்னை, மார்ச் 30—

ராஜபாளையம் ஜெயராம் மில்லில் 2 பெண்கள் உள்பட 75 தொழிலாளர்கள் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதற்காக மார்ச் 10-ந் தேதி வரை கைது செய்யப்பட்டதாகவும், சர்ஜிகல் காட்டன் மில் மின்சார இலாகா சிப்பந்திகளை சட்ட விரோதமாக காவலில் வைத்திருந்ததாக அந்த மில்லைச் சேர்ந்த 42 தொழிலாளர்கள் மார்ச் 24-ந் தேதி கைது செய்யப்பட்டதாகவும் சட்டசபையில் மந்திரி கூறினார்.

★

மதுவிலக்கு அமுல் செலவு

1952—53-ம் ஆண்டில், செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுவிலக்கு அமுல் செலவு ரு 4,68,112 என்று மதுவிலக்கு மந்திரி தெரிவித்தார்.

★

தென்னந் தோப்புக் காரருக்குக் கடன் உதவி

தஞ்சை மாவட்ட திருத்துறைப்பூண்டி தாலுகாவில் புயலால் பாதிக்கப்பட்ட 363 தென்னந்தோப்புக்காரர் கடனுக்காக மனுச் செய்து கொண்டனர்; கடன் கேட்ட தொகை 1,59,300 ரூபாய்; 202 பேருக்குக் கடன் கொடுக்கப்பட்டது. கடன் கொடுத்த தொகை 74,800 ரூபாய்," என்று ரெவின்யூ மந்திரி பதிலளித்தார்.

திரு-கொச்சி சர்க்காருக்கு நோட்டீஸ்!

—:O:—

தி.த.நா.காங். கொடுத்தது

நீர்ப்பாசனத் திட்டங்களை ஆரம்பிக்க வாய்தா!

திருவனந்தபுரம், மார்ச் 30—

தென் திருவாங்கூரில் வரவு-செலவில் குறிப்பிட்டுள்ள இரண்டு நீர்ப்பாசன திட்டங்களை ஜூன் 30-ந் தேதிக்குள் சர்க்கார் ஆரம்பிக்காவிட்டால் ஒத்துழையாமை இயக்கம் நடத்தப் போவதாக திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

இத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி அவர்கள் சர்க்காருக்கு ஒரு விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப் போவதாயும் தெரிகிறது

வெங்கட்ராம அய்யர் மனு தள்ளுபடி

—:O:—

புதுடில்லி, மார்ச் 30—

ஒரே குற்றத்துக்காக இருமுறை வழக்கு தொடுத்து தண்டிப்பதை அரசியல் சட்டத்தின் 20(2)வது ஷரத்து குறிப்பாக தடை செய்கிறதென்றும், ஆகவே டில்லி விசேஷ செஷன்ஸ் கோர்ட்டில் தம்மீது தொடரப்பட்டுள்ள வழக்கை ரத்து செய்ய வேண்டுமென்றும் மத்திய சர்க்கார் வர்த்தக தொழில் மந்திரியாலய முன்னாள் காரியதரிசி என். ஏ. வெங்கடராமன் தாக்கல் செய்திருந்த மனுவை சுப்ரீம் கோர்ட் அரசியல் சட்ட பெஞ்ச், அரசியல் சட்டத்தின் 32-வது ஷரத்துப்படி தள்ளுபடி செய்தது.

தற்போது வெங்கடராமனின் மனு நிராகரிக்கப்பட்டு விட்டதால், மூன்று வாரங்களுக்குமுன் தடைபட்டுப்போன விசேஷ செஷன்ஸ் கோர்ட் விசாரணை இனி தொடர்ந்து நடக்கும்.

நகிப் உடல் நிலை

அறிக்கை வெளியிட மறுப்பு

10-லட்சம் தொழிலாளர் வேலை நிறுத்தம்

கெய்ரோ, மார்ச் 30—

எகிப்துக்கு வந்திருந்த சவூதி அரேபிய மன்னரை, விமான நிலையத்தில் வழியனுப்பிய சிறிது நேரத்தில் சுருண்டு கீழே விழுந்து, தேகநிலை சீர்கேடுற்ற ஜெனரல் நகிபின் உடல் நிலை குறித்து எவ்வித அறிக்கையும் வெளியிடப்பட மாட்டாதென தேசிய வழிகாட்டி மந்திரியும், நகிபின் முக்கிய எதிரியுமான மேஜர் சலிம் கூறியுள்ளார்.

பார்லிமெண்டரிமுறை வாழ்க்கை 1956-ம் ஆண்டுவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதென்றார்.

அதி. சபையின் அதிகாரத்தில் நாட்டை ஒப்படைப்பதென சென்ற வியாழக்கிழமை புரட்சி கவுன்சிலில் இராணுவத்தினர் முடிவு செய்ததை யடுத்து, முடிவுகளை ஆட்சேபித்து பெரும் அளவில் ஆர்ப்பாட்டங்கள் நடந்து வருகின்றன.

புரட்சிக் கவுன்சிலை ஆதரித்து 10 லட்சம் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தனர்; போலீசாரும் தேர்தல்கள் சம்பந்தமான உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிய முடியாதென பயமுறுத்தினர். இராணுவத்தினர் கூட இரத்தப் புரட்சி செய்வதாகப் பயமுறுத்தினர்.

கோவா விடுதலை இயக்கத் தலைவர்

28-ஆண்டு சிறைத் தண்டனை!

புதுடில்லி, மார்ச் 30—

இந்தியக் குடிமகனாகிய தேஷ்பாண்டே கோவாவிலுள்ள போர்ச்சுகீசிய அதிகாரிகளால் குற்றம் சாட்டப்பட்டு 28 ஆண்டு சிறைத் தண்டனை அளிக்கப்பட்டதானது, நாகரீகமற்றதும், காட்டுமிராண்டித்தனமானதும், மனிதத் தன்மையற்றதுமான செய்கையாகும்," என்று மக்கள் சபையில் வெளிவிவகார உதவி மந்திரி தெரிவித்தார்.

• • •

கோவாவிலிருந்து பிப். 20-ந் தேதி போர்ச்சுகலுக்குக் கடத்தப்பட்ட இந்தியக் குடியாகிய தேஷ்பாண்டே லிஸ்பன் வைத்தியசாலை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

அவருக்கு மூளைக் கோளாறு எதுவும் இடையாது என்று டாக்டர்கள் அறிவித்தும்கூட, போர்ச்சுகீசியப் போலீசார் அவருக்குப் பைத்தியந்தான் என்று வற்புறுத்திக் கூறி ஆஸ்பத்திரியிலேயே வைத்திருக்கின்றனர்.

ஐ. சி. எஸ். அதிகாரியை நீக்கியது செல்லாது

—::—

சென்னை சர்க்காருக்கு எதிராக உயர்நீதி மன்றம் தீர்ப்பு!

சென்னை, மார்ச் 30—

கே. எம். ராஜகோபாலன் என்ற ஐ. சி. எஸ். ஆபீசரை 1947 ஆகஸ்டு 15-ந் தேதியன்று சென்னை சர்க்கார் பதவியிலிருந்து நீக்கியது முறையற்றது என்றும், ஆகவே செல்லுபடியாகாதென்றும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

புதுடில்லி, மார்ச் 28—

இந்திய சர்க்கார், நாட்டிலுள்ள சகல சர்க்கரைத்தொழிற்சாலைகளிலும் 1953—54-ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையிலிருந்து மேலும் ஒரு லட்சம் டன் சர்க்கரையைப் பகிரங்க மார்க்கெட்டில் விற்பனை செய்வதற்கு விடுவித்திருக்கிறார்கள்.

மல்லிகையின் நறுமணத்தில் மகிழ்வார் சில பேர்!
சிலருக்கு ரோஜாவின் மேன்மையான வாசம்தான் பிடிக்கும்!
இன்னும் சிலரோ மகிழம்பூவின் மணமே மணமென்பார்!
இவை எல்லாவற்றையும் சேர்த்து ஒவ்வொருவரும் தத்தமக்குப் பிடித்த மணத்தை அனுபவிக்க ஏதுவாகக் கதம்ப மாலை கட்டித் தருகிறான் பூக்காரன்.

பொன்னி

நாங்கள் உங்களுக்களிக்கும் இலக்கியக் கதம்பம்!
சுவையான சிறு கதைகள், நெஞ்சினிக்கும் கவிதைகள், சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகள், அறிவுத் துணுக்குகள், அரசியல் விமரிசனங்கள் இவ்வளவும் பொன்னியில் இடம் பெறுகின்றன.

1—4—54 இதழ் வெளி வந்துவிட்டது. ஏஜண்டு இல்லாத ஊர்களில் பிரதி 1-க்கு 8 அணா வீதம் முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. தனிப்பிரதி அணா 4 ஆண்டுச் சந்தா ரூ. 6—0—0.

பொன்னி லிமிடெட்
111, பவழக்காரத் தெரு, சென்னை-1.

பல நாடுகள் கோரிக்கையை அமெரிக்கா அலட்சியம் செய்தது!

—(:)—

2-வது ஹைட்ரஜன் குண்டையும் வெடித்தது!

வாஷிங்டன், மார்ச் 31—

ஜப்பானுக்கு அருகேயுள்ள பிக்கினி தீவில், இம்மாதம் 1-ந் தேதியன்று, அமெரிக்காவின் முதலாவது ஜலவாயு (ஹைட்ரஜன்) குண்டு வெடிப்பு ஒத்திகையினால் வெளியான பயங்கரமான விளைவுகளை நினைத்துப் பார்க்கக்கூட நெஞ்சம் கலங்குகிறது; ஆகவே, இனிமேல், அமெரிக்கா இவ்வித பரீட்சைகளை நடத்தக் கூடாது என்று, இந்தியா பிரிட்டன் போன்ற பல்வேறு நாடுகள் தெரிவித்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், மார்ச் 26-ந் தேதியன்று. அமெரிக்கா, தன்னுடைய இரண்டாவது ஜலவாயுக் குண்டை வெடித்துப் பார்த்துவிட்டது.

மீன் பிடிப்போருக்கு மீண்டும் ஆபத்து

டோக்கியோ, மார்ச் 30—

இந்தக் குண்டு வெட்டால் 76 படகோட்டிகளைக் கொண்ட பல ஜப் மீன்பிடிக்கும் படகுகள் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

மார்ச் 22-ந் தேதி மொத்தம் 8 படகுகள் சமீபத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்ததாகவும், இவைகளில் 2 படகுகள், 'அபாயகரமான பகுதி' என்று குறிக்கப்பட்ட பிக்கினிக்கு 600 மைல் தெற்கில் உள்ளிட்ட பிரதேசத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்தனவென்றும் ஜப்பானிய அதிகாரிகள் கூறுகின்றனர்.

இப்படகுகளில் ஒன்றுகூடத் திரும்பவில்லை; இதுவரை தகவலும் எட்டவில்லை; இந்த மீன்பிடிப்போரின் குடும்பத்தினர் மிகவும் கவலை அடைந்துள்ளனர்.

'ஏக இந்தியா'....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கத்தில், ஆசிரியர் முடிவு தேர்வில் அனுபவ பூர்வமான போதனை பயிற்சிக்குக் கட்டாயம் கிடையாது என அக்கட்டளைக்குக் காரணம் காட்டப்பட்டு இருக்கிறது.

நமக்கு பி டி., அல்லது எல். டி., பட்டங்கள் தரப்படுவதற்கு முன்னதாக, நாம் குறைந்தபட்சம் ஐந்து அனுபவம் பயிற்சித் தேர்வில் வெற்றி பெற வேண்டுமென்ற கட்டாயம் இருப்பதை, நியாய புத்தி படைத்த அனைவரும் அறிவர், இம்முறையான பயிற்சியின் காரணமாகவே, அனைத்து இந்தியாவிலும், சென்னை பல்கலைக் கழகத்தின் கல்வித் தரம் உயர்ந்ததாகக் கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, உத்திர பிரதேச கல்வித் துறையில் உள்ள எவரோ விதுவர் குறுகிய வட்டார நோய்க்குப் பலியாகி இருப்பது பதுதான, இதற்கான காரணம் என்ற முடிவிற்குத்தான் ஒருவர் வரவேண்டியதாக இருக்கிறது........

"உத்திர பிரதேச சர்க்கார் கல்வித் துறையின் இக்கட்டளையால் பாதிக்கப்பட்டுள்ளவன் நான் ஒருவன் மட்டுமேல்ல; வேறு எண்ணித் தொலையாதோரும் பாதிககப்பட்டுள்ளனர்."

சர்வ கட்சி சர்க்கார் அமைக்கக் கோரிக்கை

'அர்த்தமற்றது' என்கிறார் பாக். பிரதமர்!

கராச்சி, மார்ச் 30—

மத்திய சபையில், சர்வ கட்சி சர்க்கார் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று எதிர்க் கட்சி மெம்பர்கள் சிலர் கோரினார்கள்; அம்மாதிரி கோரிக்கை அர்த்தமற்றதாகும்; சபையில் முஸ்லீம் லீக் அமோகமான மெஜாரிட்டி கொண்டதாக இருக்கிறது," என்று பாக். பிரதம மந்திரி பாகிஸ்தான் மக்கள் சபையில் தெரிவித்தார்.

* * *

அமெரிக்க—பாக். இராணுவ ஒப்பந்தத்தை ஆதரித்து முகம்மது அலி பேசுகையில், "பாதுகாப்பு வேலைகளுக்காகப் பாகிஸ்தான் ஆயுதபாணியாக இருக்க விரும்புகிறதென்றும், எல்லையோரத்தில் இந்தியாவும், ஆயுதபாணியாகி வருகிறதென்றும், ஆக்ரமிப்புக்காக பாகிஸ்தான் இதைச் செய்யவில்லை யென்றும் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (26, ஸ்ரீ நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.